பிப்ரவரி, 2018

# இலங்கையில் பெண்கள் மற்றும் சிறுமிகளின் இயற்கைக்குப் புறம்பான இறப்புக்கள் (தடுப்பும் நீதியும்)

## பிரச்சினை

21 மில்லியன் சனத்தொகையையும் ஆண்களுக்கான 72.0 வயது மற்றும் பெண்களுக்கான 78.6 வயது ஆயுள் எதிர்பார்ப்பையும் கொண்ட இலங்கையானது தற்போது மத்திய தர வருமான நாடாக உலக வங்கியினால் கருதப்படுகிறது[1]. அதிகரித்த வருமானமானது வன்முறை மற்றும் உடல் ரீதியான அழுத்தங்களைக் குறைக்கும் என எதிர்பார்க்கப்பட்டாலும் 100,000 மக்களுக்கான வைத்தியசாலை இறப்பு வீதம் 7.1 எனும் அண்மைய புள்ளிவிபரத்தின் படி, இவை வைத்தியசாலை அனுமதியில் இதுவரை முதன்மைக் காரணிகளாகவே இருந்து வருகின்றன[2,3]. வன்முறையில் மிகவும் கடுமையான வடிவமாக கொலை இருப்பினும் (தற்கொலை மற்றும் விபத்துக்களுடன் ஒப்பிடுகையில் குறைந்த எண்ணிக்கையாக இருப்பினும்) இலங்கை குடிக்கணிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது இந்த நடவடிக்கைகளின் வீதத்தை ஒரு விடயமாக வெளியிடுவதில்லை.

### இயற்கைக்குப் புறம்பான இறப்பு என்றால் என்ன?

இயற்கைக்குப் புறம்பான இறப்பு என்பது நோய் அல்லது வயோதிபம் காரணமாக ஏற்படும் இறப்பல்ல, மாறாக காயம், அதிர்ச்சி அல்லது நஞ்சூட்டல் போன்ற வெளிக் காரணிகள் மூலம் ஏற்படுவதாகும். இவ்வகையான இறப்புக்களின் தன்மை மற்றும் சூழ்நிலைக்கு ஏற்ப அவை கொலை, தற்கொலை, விபத்து அல்லது காரணம் அறியப்படாததாக இருக்க முடியும். வன்முறை காரணமாக ஒரு இறப்பு ஏற்படுமிடத்து நேரடியானதும் தொடர்புபட்டதுமான குடும்ப உறுப்பினர் மற்றும் சமூகத்திலும் ஒரு பாரிய தாக்கத்தை ஏற்படுத்துவதானது அவர்கள் வாழும் சமூகத்தை இந்த சோகங்கள் மூலம் மீளமுடியாதவாறு அடிக்கடி மாற்றியமைக்கிறது.

*- வன்முறைத்தடுப்புக்கான உலகளாவிய அறிக்கை*

## குற்றச்செயல் குறிகாட்டி:

இலங்கை
**131**

பிராந்திய நாடுகள்:

| பாகிஸ்தான் | இந்தியா | பூட்டான் | பங்களாதேஷ் |
|---|---|---|---|
| 67 | 121 | 133 | 137 |

*மூலம்: போதைப்பொருட்களும் குற்றச்செயலும் பற்றிய ஐநா அலுவலகத்தின் சர்வதேச மனிதக் கொலைகள் புள்ளிவிபர தரவுத் தொகுதி, 2013-2015 (குற்றச்செயல் குறிகாட்டியென்பது குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் ஒரு மில்லியன் மக்களுக்கு பதிவாகிய குற்றச் செயல்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டதாகும்.)*

உலகளாவிய ரீதியில், இயற்கைக்குப் புறம்பான இறப்பானது ஆண்களின் எண்ணிக்கையை விட பெண்களின் எண்ணிக்கை ஒப்பீட்டு ரீதியில் குறைவாகும். ஆம்! இந்த இறப்புக்களுக்கு பங்களிக்கும் காரணிகள் குடும்ப மற்றும் சமூக சூழ்நிலையில் ஆண், பெண் எனும் வேறுபட்ட பால்நிலை வேறுபாடுகளின் பின்னணியில் ஆராயப்படுவது இன்றியமையாததாகும். இந்த நாட்டில் பெண்களின் இயற்கைக்குப் புறம்பான இறப்பு பற்றி பரிசீலிப்பதானது அவை ஏன், எவ்வாறு இடம்பெறுகின்றன என்பது பற்றி அறிவது மாத்திரமன்றி வன்முறையில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கான நீதியை உறுதிசெய்வதிலும் இன்றியமையாததாகும். இந்த விடயத்தில் நீதியை நிலைநாட்டுவதானது குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவது மாத்திரமன்றி மேலும் வன்முறைகளைத் தடுப்பதில் பங்களிப்புச் செய்வதில் சமூகத்தின் மீது வேறுபட்ட தாக்கங்களை செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வாறாயினும் ஒரு நாட்டில் மரணதண்டனை நிறைவேற்றுவது என்பது மேலும் வன்முறைகளை தடுக்கும் என்பதில் நிச்சயமில்லை.

---

1 The world bank- Overview –Sri Lanka. http://www.worldbank.org/en/country/srilanka/overview accessed 26.6.2016
2 Sylvia Walby, Jude Towers, Brian Francis; Is Violent Crime Increasing or Decreasing? a New Methodology to Measure Repeat Attacks Making Visible the Significance of Gender and Domestic Relations, The British Journal of Criminology, Volume 56, Issue 6, 1 November 2016, Pages 1203–1234,
3 Annual Health Statistics of Sri Lanka 2009-2010, Ministry of Health Sri Lanka

இது ஒரு வினைத்திறன்மிக்கதும் வெற்றிகரமானதுமான மரண விசாரணை மற்றும் நீதிமன்ற முறைமையின் தேவையை உணர்த்தி நிற்கின்றது. இருப்பினும், கடந்த காலங்களில் குறிப்பாக சட்ட அமுலாக்கத்தில் உள்ள தாமதம் தொடர்பான இலங்கை நீதிமன்றங்களின் வினைத்திறன் பற்றி பல சந்தர்ப்பங்களிலும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளன[3]. நீதி அமைச்சின் வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளின் படி, 2016 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை இலங்கை நீதி மன்றங்களில் மொத்தம் 725,944 வழக்குகள் தேங்கிக்கிடக்கின்றதுடன், அவற்றில் 699,784 (மேல் நீதிமன்றங்களில் 3,758, மஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்களில் 535,644) வழக்குகள் முன்னைய வருடங்களிலிருந்து தொடர்வனவாகும்[4]. மேலும், கணிப்பீடுகளின் படி ஒரு குற்றவியல் வழக்கு நிறைவடைய சராசரி 6½ தொடக்கம் 10 வருடங்கள் வரை எடுக்கிறது[5,6]. இலங்கை நீதிமன்ற முறைமையின் தேக்க நிலையை எதிர்கொள்வதில் கொள்கை மற்றும் நீதிச்சேவை மாற்றங்களின் தேவையை இந்தத் தகவல்கள் உணர்த்தி நிற்கின்றன[7].

## இயற்கைக்குப் புறம்பான இறப்புக்களுடன் தொடர்பான விசாரணை மற்றும் நீதிச் செயன்முறைகள் தொடர்பான சட்டங்களும் கொள்கைகளும்

1. 1979 இன் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைக் கோவை சட்டம், அத்தியாயம் XXX - மரண விசாரணை.

2. 1883 இன் இலங்கை தண்டனைக் கோவையும் திருத்தங்களும் (1993, 1995, 2006)

3. திடீர் மரண விசாரணையாளர் நியமனம் மற்றும் தகைமைகள் பற்றிய 23.09.2011 ஆம் திகதி அரச வர்த்தமானி அறிவித்தல்.

4. விசாரணையாளர்களது நியமனம், கொடுப்பனவுகள், ஒழுக்கக் கட்டுப்பாடு, விசாரணை முடிவு, உடலை அவசரமாகக் கையளித்தலும் தேவையற்ற மரணித்த உடல் பரிசோதனையும் தொடர்பான நீதி அமைச்சின் சுற்றுநிருபம் - 04/2007, 03/2004.

5. பிரசவ இறப்பு, விபத்துக்கள் மூலமான இறப்பு, தற்கொலை, துப்பாக்கிச் சூடு மூலமான இறப்பு, மற்றும் காரணம் அறியப்படாத இறப்பு மீதான விசாரணை தொடர்பான நீதி அமைச்சின் 03/2008 ஆம் இலக்க சுற்றுநிருபம்.

## ஆய்வு பற்றி

பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் இயற்கைக்குப் புறம்பான பெண்கள் இறப்புக்கள் பற்றியதொரு தேசிய ஆய்வை 2015 டிசெம்பர் மாதம் ருதேஃபு முன்னெடுத்தது

அ) இலங்கையின் தேர்ந்தெடுக்கப்பட்ட 5 மாகாணங்களில் பெண்கள் மற்றும் சிறுமிகளின் இயற்கைக்குப் புறம்பான இறப்புக்களின் வகைகள், விசாரணை முறைமைகள், மற்றும் அவற்றுடன் தொடர்பான காரணிகளைப் பரீட்சித்தல்,

ஆ) நீதிச் செயன்முறைகளுடன் தொடர்பான பிரச்சினைகளையும் பெண்களது இயற்கைக்குப் புறம்பான இறப்புக்களின் வெளிப்பாடு பற்றி விபரித்தல், மற்றும்

இ) பெண்களது இயற்கைக்குப் புறம்பான இறப்புக்களுடன் தொடர்பான விசாரணை மற்றும் நீதிச் செயன்முறை சார்ந்த பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கான கொள்கை உள்ளீடுகளையும் வழிகாட்டல்களையும் வழங்கல்.

## தரவு பற்றி

தெரிவு செய்யப்பட்ட 5 மாகாணங்களிலிருந்தும் இயற்கைக்குப் புறம்பான

**729 பெண் மரணங்கள் ஆய்வுக்கு**

உட்படுத்தப்பட்டுள்ளன. இந்த தரவுகளானது பொலிஸ், திடீர் மரண விசாரணை அதிகாரி மற்றும் நீதிமன்ற மருத்துவ அதிகாரிகளின் விசாரணை கோப்புக்களிலிருந்து பெறப்பட்டதாகும்.

**இலங்கையில் விபத்து நிகழ்வு விகிதம்**
(ஒரு மில்லியன் சனத்தொகைக்கு)




**இலங்கையில் தற்கொலை நிகழ்வு விகிதம்**
(ஒரு மில்லியன் சனத்தொகைக்கு)




**இலங்கையில் கொலை நிகழ்வு விகிதம்**
(ஒரு மில்லியன் சனத்தொகைக்கு)




*நிகழ்வு விகிதங்கள் இலங்கை பொலிஸ் மற்றும் குடித்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களங்களிலிருந்து பெறப்பட்ட புள்ளிவிபரங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்பட்டுள்ளது.*

---

4 Report of the Sri Lanka Law's Delays and Legal Culture Committee. Ministry of Justice and Asia Foundation 1985 Yohan Perera, 725,944 cases pending in courts: Ministry of Justice. Daily Mirror 2017-06-09

## இறப்பில் வயது வகை

| | விபத்து | | தற்கொலை | | கொலை | | இயற்கைக்குப் புறம்பான இறப்புக்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வயதுப் பிரிவு | N | % | N | % | N | % | N | % |
| 25 வயதிலும் குறைவு | 38 | 16 | 100 | 40 | 44 | 18 | 182 | 25 |
| 25 – 60 வயதுகள் | 109 | 47 | 125 | 50 | 143 | 59 | 377 | 52 |
| 60 வயதிலும் அதிகம் | 87 | 37 | 27 | 10 | 56 | 23 | 170 | 23 |
| மொத்தம் | 234 | 100 | 252 | 100 | 243 | 100 | 729 | 100 |

பெரும்பான்மை
**25-60 வயதுக்கு**
இடைப்பட்டவர்கள்

## இறப்பின் வகை




### பெண்களின் இயற்கைக்குப் புறம்பான இறப்புக்களுக்கான பிரதான காரணிகள்

**விபத்துக்கள்**

**60%** வீதி விபத்துக்கள்

**11%** நீரில் மூழ்கல்

**3%** தீக்காயம்

**தற்கொலைகள்**

**43%** நஞ்சூட்டம்

**40%** தூக்கில் தொங்குதல்

**9%** தீமூட்டல்

**கொலைகள்**

**40%** கூரிய அழுத்த தாக்கம்

**22%** கழுத்து நெரிப்பு

**21%** மழுங்கிய அழுத்த தாக்கம்

---

5 PAS Edirisinghe, IDG Kitulwatte, AAS Sihanada, BAAR Bulathsinhala Justice delayed –Justice denied; a study on time intervals of medico-legal examinations, reporting and giving evidence in cases of alleged child abuse victims. Medico-Legal Journal of Sri Lanka 2011; 1: 20-26.

6 Yasantha Kodagoda Criminal Justice System of Sri Lanka: A pragmatic approach to enhancing its efficacy, Joiner Law Journal 2017;8:30-34

7 Report of the National Law Conference 2016: Bar Association of Sri Lanka and USAIDS 2017

**பெண்களின் இயற்கைக்குப் புறம்பான இறப்பு நிகழ்வு வீதம் 2016 – இலங்கை**

**கொலைகள்:**
ஒரு வருடத்தில் ஒரு மில்லியன் மக்களுக்கு **23.6**

**தற்கொலைகள்:**
ஒரு மில்லியன் மக்களுக்கு **142.6**

**விபத்துக்கள்:**
ஒரு மில்லியன் மக்களுக்கு **114.8**

**இலங்கையின் 5 மாகாணங்களில் பெண் கொலைகள் 2013 – 2015 மில்லியன் சனத்தொகைக்கான நிகழ்வு விகிதம்**




**இலங்கையின் 5 மாகாணங்களில் பெண் தற்கொலைகள் 2013 – 2015 மில்லியன் சனத்தொகைக்கான நிகழ்வு விகிதம்**




**இலங்கையின் 5 மாகாணங்களில் பெண்கள் விபத்து 2013 – 2015 மில்லியன் சனத்தொகைக்கான நிகழ்வு வீதம்**




## இலங்கையின் 5 மாகாணங்களில் பெண்கள் இயற்கைக்குப் புறம்பான இறப்புக்கள் பதிவு விகிதம்

2013 இலிருந்து 2015 வரை கொலைகள் விகிதத்தில் பொதுவாக வீழ்ச்சி காணப்படுகிறது. 2016 இல் தென் மற்றும் கிழக்கு மாகாணத்தில் ஒரு சிறிய அதிகரிப்பு காணப்படுகிறது.

2013 - 2015 காலப்பகுதியில் வட மத்திய மாகாணம் தவிர ஏனைய பகுதிகளில் தற்கொலை விகிதத்தில் வீழ்ச்சி காணப்படுகிறது.

தென், கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் விபத்துக்கள் விகிதம் அதிகரித்துக் காணப்படுவதுடன் மேல் மற்றும் சபரகமுவ மாகாணங்களில் அதே நிலையில் உள்ளது.

*நிகழ்வு விகிதங்கள் இலங்கை பொலிஸ் மற்றும் குடித்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களங்களிலிருந்து பெறப்பட்ட புள்ளிவிபரங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்பட்டுள்ளது.*




**பெண்கள் இறப்புக்களில் மூன்றில் ஒரு பகுதிக்கும் அதிகமானவை நெருங்கிய பங்காளரின் வன்முறை தொடர்பான பிரச்சினைகளுடன் தொடர்புற்றுள்ளது, % குடும்ப/தெரிந்த நபர்களுடனான நெருங்கிய உறவில் ஏற்படும் விரிசல்களுடன் தொடர்பானது. இதில் 36% கொலைக்குற்றவாளிகள் சட்டரீதியான கணவன் / காதலன் / முன்னாள் காதலனாகவும், 21% இரத்த உறவுகளாகவும் காணப்படுகிறது. இதில் 8% (n-20) ஆனவற்றில் இறந்த பெண்கள் நெருங்கிய துணையின் மீதான வன்முறையை ஒரு தடவையாவது சட்ட ஒழுங்குமுறை நிறுவனங்களில் முறைப்பாடு செய்ததுடன், 3% (n-6) ஆனோரால் 3 தடவைக்கு மேல் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.**

## மரண விசாரணை (பொலிஸ் மற்றும் தடயவியல்)

இயற்கைக்குப் புறம்பான பெண் இறப்பு நிகழ்வுகளில், 80% இலும் அதிகமானவற்றில் பொலிஸ் மற்றும் தடயவியல் விசாரணைகள் 24 மணி நேரத்திற்குள் நிறைவடைகிறது.

நேர்காணப்பட்ட பெரும்பாலானவர்கள் ஒப்பீட்டுரீதியில் நீதித்துறை செயற்பாட்டிலும் பார்க்க பொலிஸ் மற்றும் தடயவியல் விசாரணையில் திருப்திகாண்கின்றனர். (இருப்பினும், தொடர்பாடல் மற்றும் பக்கச்சார்பின்மை தொடர்பான கரிசனைகள் உள்ளன).



## நீதிச் செயன்முறை

243 கொலைகள் பற்றிய ஆய்வில், விசாரணைகள் முடிவுற்று ஆனால் முடிவுரைகள் தொகுக்கப்படாத 115 (47%) வழக்குகள் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. கால இடைவெளி பற்றிய பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட இந்த 115 வழக்குகளில் 29% ஆனவை குறித்த நிகழ்வு நடந்து 6 மாதங்களுக்குள்ளே சட்டமா அதிபருக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் மற்றைய 15% ஆனவை ஒரு வருடத்திலும் கிடைக்கப்பெற்றுள்ளன.

குற்றப் பத்திரிகையை சமர்ப்பிப்பது சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஒரு கடமையாகும். சட்டமா அதிபர் திணைக்களத்தின் கால செயன்முறை பற்றிய பகுப்பாய்வின் படி 5 (10%) வழக்குகள் மாத்திரமே ஒரு வருட காலத்தில் முடிவடைந்துள்ளதுடன் ஏனையவற்றிற்கான தண்டனைகளை நிர்ணயம் செய்ய ஒரு வருடத்திலும் அதிக காலம் எடுக்கப்பட்டுள்ளது.

27 வழக்கு விசாரணைகள் மேல் நீதிமன்றத்தில் நடைபெற்றுள்ளன. இந்த விசாரணைகள் பற்றிய கால இடைவெளி பற்றிய பகுப்பாய்வின் படி, ஒரு வருடத்தினுள்ளே, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 2 ஆகும். 12 (48%) விசாரணைகள் 1-3 வருடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன 13 (48%) விசாரணைகள் குறித்த நிகழ்வு நடந்து 3 வருடங்களின் பின்னரே ஆரம்பித்துள்ளன. இருப்பினும், 6 வழக்குகளின் விசாரணைகளே நிறைவுற்றுள்ளன. இதில், ஒரு விசாரணை ஒரு வருடத்திலும் மற்றைய மூன்று விசாரணைகளும் 1-3 வருடங்களிலும், எஞ்சிய இரண்டும் 3-6 வருடங்களிலும் நிறைவுற்றுள்ளன.

### 2013 இல் ஆரம்பித்த வழக்குகளின் முன்னேற்றம் (2017 ஆகஸ்ட் வரை)

| தற்போதைய நிலை | தவணைகள் | வீதம் |
|---|---|---|
| மஜிஸ்ட்ரேட் விசாரணை | 19 | 27 |
| கோப்பு சட்டமா அதிபர் திணைக்களத்தில் | 26 | 37 |
| மேல் நீதிமன்றம் | 21 | 30 |
| வழக்கு நிறைவு/C4 | 4 | 6 |
| **மொத்தம்** | **70** | **100.0** |

**2013 இல் கொலைகள் மீதான நீதிச் செயன்முறை**

3 வருட நிறைவில் 30% வழக்குகளே மேல் நீதிமன்றத்தை அடைந்துள்ளன



## குடும்ப நேர்காணல்கள்: தெரிவுசெய்யப்பட்ட கூற்றுக்கள்

"வழக்கு இன்னும் முடிவடையவில்லை. நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டுகிறது. நான் தொடர்ச்சியாக நீதிமன்றம் செல்வதில்லை. நான் சலித்துப் போயுள்ளேன். நீதி கிடைப்பது பற்றிய எவ்வித எதிர்பார்ப்பும் என்னிடம் இல்லை. ஆட்கள் பற்றிய நம்பிக்கையை நான் இழந்துள்ளேன். அவனது குடும்பம் இங்கிருந்து இடம்பெயர்ந்துள்ளது. கடவுள் ஒருவன் இருந்தால், அவன் சரியான முறையில் தண்டிக்கப்பட்டிருப்பான் (அழுகை)"

கிழக்கு மாகாணத்தின் மண்டூரிலிருந்து, கொலை செய்யப்பட்ட ஒருவரது தாயார். அவரது மகளும் 8 மாத குழந்தையும் மூன்று வருடங்களுக்கு முன்னர் மருமகனால் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

"5 வருடங்கள் கடந்த நிலையிலும் குற்றவாளிகள் இதுவரை தண்டிக்கப்படவில்லை. நான் ஒவ்வொரு மாதமும் பொலிஸுக்கு வருகின்றேன். எமது கோப்பு சட்டமா அதிபர் திணைக்களத்தில் என்று கூறி வருகின்றனர்"

வட மத்திய மாகாணத்திலிருந்து பாதிக்கப்பட்ட ஒருவரின் தந்தை. அவரது மனைவியும், 12 வயது மகளும் 5 வருடங்களுக்கு முன்னர் கொள்ளையர்களால் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

“அவனுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. நாங்கள் பல முறை நீதிமன்றம் சென்றோம். தற்போது 2 வருடங்கள் சென்றுள்ளன. அவன் வெளியே உள்ளான். வழக்குக் கோப்பு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொலிஸ் கூறுகிறது. அவன் தூ க்கிலிடப்பட வேண்டும். இப்படிப்பட்டவர்களுக்கு சிறைத் தண்டனை போதாது. இந்த வழக்கு பின் போடப்படாது அவசரமாக முடிவடைய வேண்டும். அதேபோல குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். அதன் மூலமே இவ்வாறான குற்றங்கள் குறைவடையும்”

குருவிட்டயிலிருந்து பாதிக்கப்பட்டவரின் சகோதரர். மூன்று வருடங்களுக்கு முன்னர், அவரது சகோதரியும் பிள்ளையும் அவளது கணவரால் தீ முட்டிக் கொல்லப்பட்டுள்ளனர்.

“நீதிமன்ற விசாரணைகள் அனைத்துக்கும் நாம் தொடர்ந்தும் வரத் தேவையில்லை என பொலிஸ் கூறுகிறது. இருப்பினும், மஜிஸ்ட்ரேட் விசாரணை தொடர்பாக நாம் திருப்தியடையவில்லை. நாம் ஒவ்வொரு வழக்கு விசாரணைக்கும் போகின்றோம்.”

“சந்தேக நபர் அங்கொட மனநோயாளர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வேளை நடந்தவை பற்றி அவர் தெளிவாகக் கூறியுள்ளார். அவர் ஒரு மனநோயாளியல்ல என வைத்திய அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை கிடைக்கப் பெற்றிருந்தும் இந்த நீதிபதி அவனை ஒரு மன நோயாளியாகவே கருதுகிறார். ஏனெனில் அவரது சகோதரியும் ஒரு மன நோயாளி என்பதனால் அவனும் நீதிமன்றத்தில் தனது சகோதரியைப் போன்று நடிக்கிறான்”

காத்தான்குடியிலிருந்து தாயும் தந்தையும். 3 வருடங்களுக்கு முன்னர் அவரது 8 வயது மகள் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்ட பெண்களது இறப்புக்களின் நீதிச் செயன்முறைகள் ஒவ்வொரு நிலையிலும் குறிப்பிடத்தக்க தாமதத்தைக் காட்டுகிறது. தாமதம் காரணமாக அநேகமானோர் நீதிச் செயன்முறையில் நம்பிக்கை இழந்துள்ளனர்.




## பரிந்துரைகள்

**நீதிச் சேவை விரிவாக்கத்தின் போது சனத்தொகைக் கட்டமைப்பும் வழக்குகளின் பரம்பல் பாங்கும் கவனத்தில் கொள்ளப்படுவதுடன் இவை ஒழுங்குமுறைப்படி மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும்.**

### 1. அடையாளம் காணப்பட்ட அடிப்படைக் காரணிகளை எதிர்கொள்வதன் மூலம் தடுத்தல்

மூன்று கொலை மற்றும் தற்கொலை இறப்புக்களில் ஒன்று உறவுமுறையில் ஏற்படும் விரிசலின் பெறுபேறாகும்

சீர்திருத்தப் பணிகள், உளவள ஆலோசனையும் நட்புச் சேவையும், பாதுகாப்பும் சட்ட உதவியும் உள்ளிட்ட சேவைகளை எவ்வாறு அடைவது என்பது பற்றிய சேவையும் உரிய நேரத்தில் வழங்கப்பட வேண்டும்.

பெண்கள் மத்தியிலான இயற்கைக்குப் புறம்பான இறப்புக்களில் வீதி விபத்துக்கள் உயர்வாக உள்ளது. ஆகவே இவ்வகையான இறப்புக்களைத் தடுப்பதற்கான வழிமுறையாக வீதிப் பாதுகாப்பு உறுதிசெய்யப்பட வேண்டும்.

- **பெண்களை வலுவூட்டல்:**

  அவர்களுக்காகவும் அவர்களது குடும்பத்திற்காகவும் தீர்மானமெடுப்பதில் பெண்களது நிதிச் சுதந்திரத்தை விரிவுபடுத்தி அவர்களை வலுப்படுத்தல்.

- **வாழ்க்கைத் திறன்கள் மேம்பாடு (பாடசாலைகளைஅடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக):**

  மனித உரிமைகள், பாலியலும் இனப்பெருக்கச் சுகாதாரமும், உறவுமுறைக் கல்வி, பால்நிலையை அடிப்படையாகக் கொண்ட/வீட்டு வன்முறை, மற்றும் குடும்ப முரண்பாட்டைத் தீர்த்தல் பற்றிய அறிவு, திறன்கள் மற்றும் மனோநிலையை விருத்திசெய்தல்.

- **தேவையுடைய பெண்களுக்கான வலுப்படுத்தப்பட்ட உதவி:**

  நட்புறவுச் சேவையை ஊக்குவித்தல் மற்றும் நலன்புரி அதிகாரிகளுக்கான பால்நிலை உணர்திறன்மிக்க உளவள ஆலோசனை வழங்கல் (உ+ம் சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள்), பெண்களுக்கு எதிரான வன்முறைகளை எதிர்கொள்வதில் பால்நிலை உணர்திறன்மிக்க சட்ட அமுலாக்க முறைமைக்கு வழியமைத்தல், மன அழுத்தங்களுக்கு உட்பட்டவர்களுக்கான உள சமூக உதவியை மேம்படுத்தல்.

- **விருத்திசெய்யப்பட்ட வீதிப் பாதுகாப்பு:**

  வீதிச் சட்டங்கள் பற்றிய கல்வியை ஊக்குவித்தல், கண்டிப்பான வீதி ஒழுங்கைக் கடைப்பிடித்தல்.

## 2. மரண விசாரணை முறைமையின் தரத்தை விருத்திசெய்தல்

**நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்ட விசாரணை அதிகாரிகள், பொலிஸ், தடயவியல் மருத்துவ நிபுணர்கள் மற்றும் தடயவியல் விஞ்ஞானிகள்** உள்ளிட்ட மரண விசாரணை முறைமையின் **பிரதான பங்காளர்கள்**.

பக்கச் சார்பின்மையை உறுதியாகவே பேணும் வகையில் அனைத்து பங்குதாரர்களுக்கிடையேயுமான **ஒருங்கமைப்பு**.

மரண விசாரணையின் போது **பால்நிலை உணர்திறனும் ஒழுங்கு விதிகளும்** பேணப்படல் வேண்டும்.

- **திறன் மேம்பாடு:**

  மனித வள மேம்பாடு, தரமான பயிற்சி மற்றும் தொடர்ச்சியான CPD செயற்பாடுகளை வழங்கள், உட்கட்டமைப்பு விருத்தி (ஆய்வகம், தடயவியல் அடிச்சுவட்டு ஆய்வகம், மரபணு, DNA மற்றும் கலவியல் ஆய்வு) குற்றப்புலன் விசாரணைக்கான விஷேட பொலிஸ் பிரிவை நிறுவுதல், அறிக்கையிடல், ஆவணப்பதிவு, மற்றும நீதிமன்ற முன்வைப்பில் (e-record முறைமை) புதிய தொழில்நுட்பத்தைப் பிரயோகித்தல்.

- **தர உறுதி:**

  இயற்கைக்கு மாறான மரண விசாரணைகளுக்கான செயற்பாட்டு ஒழுங்கு வழிகாட்டல்கள் மற்றும் நிறுவன தரங்களை நிறுவுதல், ஆய்வுகளுக்கான அங்கீகாரத்தை ஊக்குவித்தல், அறிக்கை சமர்ப்பித்தல், வருடாந்த/ஒழுங்குமுறையிலான கணக்காய்வு முறைமை, மக்கள் பின்னூட்டத்திற்கான இறுதித் திகதியை நிர்ணயித்தல்.

## 3. நீதி நிர்வாகத்துக்கான வினைத்திறன்மிக்க நீதிமன்ற முறைமை

**அதிகரிக்கும் புதிய வழக்குகள் மற்றும் தேங்கிய வழக்குகளைத்** தீர்ப்பதில் ஒரு நவீன நீதிமன்ற முறைமை இன்றியமையாததாகும். அனைத்து மட்டங்களிலும் திறன்கள் மேம்படுத்தப்பட வேண்டும், உ+ம் நீதிமன்றங்கள், சட்டமாஅதிபர் திணைக்களம் அதேபோல மேல் நீதிமன்றங்கள்.

அரசியல் செல்வாக்கு அல்லது ஏனைய அழுத்தங்களுக்கு உட்படாமை உட்பட நீதித்துறையின் அனைத்து உத்தியோகத்தர்களும் நீதிச் செயன்முறைகளில் உரிய நெறிஒழுங்கைப் பேண வேண்டும்.

- **திறன் மேம்பாடு:**

  மனித வள மேம்பாடு, தரமான பயிற்சி மற்றும் தொடர்ச்சியான CPD செயற்பாடுகளை வழங்கள், நீதிமன்ற அறைகள், நடமாடும் நீதிமன்றங்கள் ஆகியனவற்றின் உட்கட்டமைப்பு விருத்தி, ஆவனக் காப்பு, நீதிமன்ற மற்றும் இதர நீதிச் சேவைகளின் சீரான முகாமையில் நவீன தகவல் முறைமையைப் பிரயோகம், நீதித்துறை உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ திறன்கள் மேம்பாடு.

- **தர உறுதி:**

  இயற்கைக்கு மாறான மரண வழக்கு விசாரணைகளுக்கான செயற்பாட்டு ஒழுங்கு வழிகாட்டல்கள் மற்றும் நிறுவன தரங்களை நிறுவுதல், விசாரணை முடிவு, வருடாந்த கணக்காய்வு முறைமை, மக்கள் பின்னூட்டத்திற்கான இறுதித் திகதியை நிர்ணயித்தல்.

- **சட்ட சீர்திருத்தமும் உரிய நேர அமுலாக்கமும்:**

  குற்றவியல் நடைமுறைக் கோவை, சாட்சிகள் சட்டம், நீதிச் செயன்முறைச் சட்டம், சாட்சிகள் - பாதிக்கப்பட்டவர் பாதுகாப்புச் சட்டம்.

## தொடர்புடைய எழுத்தாளர் மற்றும் முதன்மை ஆராய்ச்சியாளர்

பேராசிரியர். அனுருட்தி எதிரிசிங்கே

## எழுத்தாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள்

பேராசிரியர். அனுருட்தி எதிரிசிங்கே | பேராசிரியர். மைத்ரீ விகிராமசிங்க்கே | பேராசிரியர். இந்திரா கித்துள்வத்தே | கலாநிதி. அனு'ா எதிரிசிங்கே | கலாநிதி. உதார செனரத்னே | கலாநிதி. ஹண்டுன் விஜேவர்த்தன | பேராசிரியர். எ. பதமேஸ்வரன் | கலாநிதி. பி. பரணிதரன் | கலாநிதி. அனிஸ்ரா விஜேநாயக்கே | கலாநிதி. நிர்மலா பெரேரா | பேராசிரியர். அஸ்வினி பெர்னாண்டோ | திருமதி. டிலினி சமளி வாலிசுந்தர

## தரவு சேகரிக்கும் மேற்பார்வையாளர் குழு (கணியத்தரவு பகுதியம்)

பேராசிரியர். அனுருட்தி எதிரிசிங்கே | கலாநிதி. அனு'ா எதிரிசிங்கே | கலாநிதி. உதார செனரத்னே | கலாநிதி. ஹண்டுன் விஜேவர்த்தன

## தரவு சேகரிக்கும் மேற்பார்வையாளர் குழு (பண்பின தரவு பகுதியம்)

பேராசிரியர். மைத்ரீ விகிராமசிங்க்கே | கலாநிதி. அனு'ா எதிரிசிங்கே | பேராசிரியர். அனுருட்தி எதிரிசிங்கே | . உதார செனரத்னே | கலாநிதி. ஹண்டுன் விஜேவர்த்தன

## தரவு சேகரிக்கும் குழு

திரு சந்தரு ஜெய்ரடனே | திரு. சுராஜ் ஜெயரத்ன | கலாநிதி பாபசார விஜயரத்னே | கலாநிதி. சஜினி ஹேரத், கலாநிதி பா'ாந்த ஜெயவீர | திருமதி சமிந்தி ஹேவாகமஹே | கலாநிதி. கஜமுகி தமிழ்வண்ணன் | திரு வே. தமிழ்வண்ணன | கலாநிதி. மலிந்த ஹேவகே | கலாநிதி. அமல்கா பத்மபெருமா | கலாநிதி. குமார சேனநாயக்க.

*'மக்களின் பிரச்சனைகள் மீதான ஓர் பார்வை'* ஆனது
இலங்கையின் சமூக அபிவிருத்தி பிரச்சனைகள்
தொடர்பிலான கொள்கைச்சுருக்க
தொடர் ஆகும்.

**இலங்கை ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம்**
பௌத்தாலோக மாவத்த,
கொழும்பு 07, இலங்கை

தொலைபேசி: +94 (011) 2580840

/unfpa.srilanka @unfpasrilanka @unfpasrilanka srilanka.unfpa.org